


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.12.2023) கோயம்புத்தூரில் நடைபெற்ற விழாவில், காந்திபுரம் மத்திய சிறைச்சாலை வளாகத்தில் 165 ஏக்கர் பரப்பளவிலான செம்மொழிப் பூங்காவிற்கு, முதற்கட்டமாக 45 ஏக்கர் பரப்பளவில் 133.21 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள செம்மொழிப் பூங்காவிற்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் பி.ஆர்.நடராஜன், அந்தியூர் செல்வராஜ், கு.சண்முகசுந்தரம், சட்டமன்ற உறுப்பினர் திருமதி. வானதி சீனிவாசன், கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர் திருமதி கல்பனா ஆனந்தகுமார், முதல்வரின் முகவரி திட்ட சிறப்பு அலுவலர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், மக்களுடன் முதல்வர் சிறப்புப் பணி அலுவலர் ப. மதுசூதன் ரெட்டி, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி, கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் மா. சிவகுரு பிரபாகரன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மாணவ, மாணவிகள் கல்வியில் முன்னேற வேண்டும் என்ற அடிப்படையில்

# முதல்வர் பல்வேறு கல்வி சார்ந்த திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்!

## புதுக்கோட்டையில் அமைச்சர் எஸ்.ரகுபதி பேச்சு!

புதுக்கோட்டை. டிச.19

புதுக்கோட்டை இராணியார் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில், பள்ளிக் கல்வித்துறை சார்பில், 583 மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் ஐ.சா.மெர்சி ரம்யா தலைமையில் 15.12.2023 அன்று வழங்கினார்.

பின்னர் அமைச்சர் எஸ். ரகுபதி தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாணவ, மாணவிகள் கல்வியில் முன்னேற வேண்டும் என்ற அடிப்படையில் பல்வேறு கல்வி சார்ந்த திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். மேலும் இல்லம் தேடிக் கல்வித்திட்டம், உங்களது உயர் கல்வியை நீங்களே தேர்வு செய்யும் கல்லூரி கனவுத் திட்டம், நான் முதல்வன் திட்டம் உள்ளிட்ட பல சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாணவ, மாணவிகளின் நலன் கருதி விலையில்லா மிதிவண்டிகளை விரைந்து வழங்கிட வேண்டும் என்று அறிவுறுத்தியதின் பேரில் 11 ஆம் வகுப்பு பயில்பவர்களுக்கு தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகள் முன்கூட்டியே வழங்கப்படுகிறது.



அதன்படி 11 ஆம் வகுப்பு பயிலும் 583 மாணவிகளுக்கு ரூ.27.75 இலட்சம் மதிப்பிலான தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டது. மேலும் மாவட்டத்தில் எப்போதும் முதலாவதாக விலையில்லா மிதிவண்டிகளை மாணவிகளுக்கு வழங்கி தொடங்கி வைக்கும் பள்ளி இராணியார் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி என்பது மிகவும் மகிழ்ச்சியானதாகும்.

இந்த விலையில்லா மிதிவண்டிகளை பெற்றுக் கொண்ட மாணவிகளுக்கு கல்வி கற்க உரிய நேரத்திற்கு சென்று வருவதற்கு பயனுள்ளதாக அமையும். மாணவிகள் மிதிவண்டியினை நாள்தோறும் பயன்படுத்துவதன் மூலம் தங்களுக்கான உடற்பயிற்சியாகவும் அமைகிறது. மேலும் மாணவிகள் அனைவரும் தாங்கள் விரும்பும் துறையில் கல்வி பயின்று முன்னேற்றம் அடைந்து, சமுதாயத்தில்உயர்ந்த நிலையினை அடைய வேண்டும்.எனவே சிறப்பாக கல்வி பயின்று இந்த ஆண்டு அரசு பொதுத் தேர்வில் புதுக்கோட்டை மாவட்டம் மாநில அளவில் முதல் மூன்று இடங்களுக்குள் பெற்றிட வேண்டி வாழ்த்துகிறேன் என அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் வை.முத்துராஜா, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ஜெயலட்சுமி தமிழ்செல்வன், நகர்மன்றத் தலைவர் திலகவதி செந்தில், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் எம்.மஞ்சுளா, புதுக்கோட்டை மாவட்ட கல்வி அலுவலர் ரமேஷ், பள்ளி தலைமையாசிரியர் தமிழரசி, பள்ளித்துணை ஆய்வாளர்கள் வேலுச்சாமி, குருமாரிமுத்து, எம்.எம். பாலு, தமிழ்ச்செல்வன் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், பள்ளி ஆசிரியர், ஆசிரியைகள், அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### ஆட்சியர் ச.உமா தலைமை - எஸ்.எம்.மதுரா செந்தில் முன்னிலை

# ரூ.5.59கோடியில் பல்வேறு திட்டப்பணிகள்!

## அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் துவக்கி வைத்தார்

நாமக்கல், டிச. 19-

நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் நகராட்சி, எடப்பாடி சாலையில் ரூ. 3.60 கோடி மதிப்பீட்டில் புதியதாக வாரச்சந்தை அமைக்கும் பணி, வார்டு எண்.14 ராஜாஜி குப்பத்தில் ரூ.24.96 லட்சம் மதிப்பீட்டில் சமுதாய கழிப்பிடம் மற்றும் சிறுநீர் கழிப்பறை கட்டும் பணி, பள்ளிபாளையம் நகராட்சி, கண்டிப்புதூர் நகராட்சி துவக்கப்பள்ளிக்கு ரூ. 1 கோடி மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறைகள் காட்டும் பணி, ரூ. 10 லட்சம் மதிப்பீட்டில் கழிப்பிடம் கட்டும் பணி, நாட்டாகவுண்டன்புதூர் நகராட்சி துவக்கப்பள்ளிக்கு ரூ. 32 லட்சம் மதிப்பீட்டில் 2 வகுப்பறைகள் காட்டும் பணி, ஆவரங்காடு நகராட்சி துவக்கப்பள்ளிக்கு ரூ.32.00 லட்சம் மதிப்பீட்டில் 2 வகுப்பறைகள் காட்டும் பணி என மொத்தம் ரூ.5.59 கோடி மதிப்பீட்டில் 6 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டும் விழா நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் மருத்துவர் ச.உமா நிகழ்ச்சிக்கு தலைமை வகித்தார். நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம். மதுரா செந்தில் முன்னிலை வகித்தார். விழாவில் தமிழ்நாடு வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு புதிய திட்டப்பணிகளை துவக்கி வைத்துப் பேசினார்.

அப்போது, குமாரபாளையம் நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தை, எடப்பாடி சாலையில், திறந்தவெளி மைதானமாக தற்சமயம் இயங்கி வருகிறது. கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ. 3.60 கோடி மதிப்பில் மேற்கூரையுடன் கூடிய வாரச் சந்தை கட்டிடம் அமைக்கப்படுகிறது. வாரச்சந்தை வளாகத்தில் 144 உட்புற தளக் கடைகள், 24 வணிக வளாகக் கடைகள், 1 சுகாதார வளாகம், 4900 சதுர மீட்டர் உட்புற சாலைகள் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்படும். குமாரபாளையம் நகராட்சி வார்டு எண்.14 ராஜாஜி குப்பம் பகுதியில் உள்ள சமுதாய கழிப்பிடம் 2000 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இக்கழிப்பிடம் மிகவும் பழுதடைந்து மராமத்து பணிகள் மேற்கொள்ள இயலாத நிலையில், புதியதாக கழிப்பிடம் கட்ட தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ரூ. 24.96 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. புதியதாக கட்டப்பட உள்ள சமுதாய கழிப்பிடத்தில் 12 ஆண்கள், பெண்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் கழிப்பிடம் இருக்கைகள், 4 சிறுநீர் கழிப்பறைகள், 4 குளிக்கும் அறை, துணி துவைக்கும் மேடை, நாப்கின் இயந்திரம் அமைக்கப்படுகிறது.

பள்ளிபாளையம் நகராட்சிக்கு மாநில நிதிக்குழு திட்டத்தின் மூலம் ரூ. 74 லட்சம் மதிப்பீட்டில் 3 பணிகள் மற்றும் மாநில நிதிக் குழு உட்கட்டமைப்பு திட்டத்தன் கீழ் ரூ.1.74 கோடி மதிப்பில் 4 பணிகள், பள்ளிபாளையம் நாட்டாகவுண்டன்புதூர் நகராட்சி துவக்கப்பள்ளி, கண்டிப்புதூர் நகராட்சி துவக்கப் பள்ளி மற்றும் ஆவாரங்காடு நகராட்சி துவக்கப் பள்ளி ஆகிய பள்ளிகளில் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. எலச்சிபாளையம் வட்டாரத்திற் குட்பட்ட அகரம் கிராமத்தில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ. 12.61 லட்சம் மதிப்பீட்டில் அகரம் குக்கிராமத்தில் அங்கன்வாடி மையக் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்றார். இந்நிகழ்ச்சிகளில் குமாரபாளையம் நகராட்சித் தலைவரும், வடக்கு நகரக் கழகச் செயலாளருமான த.விஜய் கண்ணன், பள்ளிபாளையம் நகராட்சித் தலைவர் மோ.செல்வராஜ், எலச்சிபாளையம் ஒன்றிய கிழக்கு செயலாளர் எம்.தங்கவேல் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### உழவர்கரை தொகுதியில்

# ஆட்டோ சங்கப் பெயர் பலகை திறப்பு விழா!

## எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா பங்கேற்பு !

புதுச்சேரி, டிச. 19-

புதுவை மாநில தமிழன தளபதி ஆட்டோ தொழிலாளர்கள் முன்னேற்ற சங்கம் சார்பில் உழவர்கரை தொகுதி கம்பன் நகரில் புதிய சங்க பெயர் பலகை திறப்பு விழா இன்று காலை நடந்தது.

தொகுதி செயலாளர் கலியகார்த்திகேயன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாநில அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா கலந்து கொண்டு, சங்க பெயர் பலகையை திறந்து வைத்து, ஆட்டோ தொழிலாளர்களுக்கு சீருடை மற்றும் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள், இனிப்பு கள் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், திமுக தலைமைச் செயற்குழு உறுப்பினர் அருட்செல்வி, உருளையன்பேட்டை தொகுதி செயலாளர் சக்திவேல், அவைத்தலைவர் விஜயரங்கம், வழக்கறிஞர் அணித் தலைவர் லோககணேசன், மாநில துணை அமைப்பாளர்கள் வழக்கறிஞர் தாமோதரன், அன்புமாறன், சுகுமாறன், சுப்ரமணியன், சந்தோஷ், பாலு, புஷ்பலதா, ஜான்சிராணி, எமில், ஐய்யப்பன், எழில், அமுதன், செல்வராஜ், கங்காதரன், அன்புச்செல்வன், ரங்கநாதன், அகிலன், துணைச் செயலாளர் வெங்கடாஜலபதி, பொருளாளர், செந்தமிழ்செல்வன், தொ.மு.ச. நிர்வாகிகள் அண்ணா அடைக்கலம், காயாரோகணம், சிவக்குமார், பூமிநாதன், ராஜசேகர், ஆட்டோ சங்கத் தலைவர் முரளி, விமல், விக்னேஷ், தினேஷ், முத்து அந்தோணி, லுசியன், முருகவேல், தொகுதி நிர்வாகிகள் செல்வராஜ், ழாக், கண்ணன், ரமேஷ், ராதாகிருஷ்ணன், கிருஷ்ணமூர்த்தி, முரளி, முருகன், மரிஜோசப்திவி, அன்பழகன், அகஸ்டீன், மதியழகன், தொகுதி இளைஞர் அணி அருண், ரகு, செயற்குழு உறுப்பினர்கள் செல்வம், லமார் ஜான்சன், அர்மன், பாபு, ஜான்சன் மாறன், லூர்துநாதன், மாரிமுத்து, சந்திரன், கில்பர்ட், சதீஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



உழவர்கரை தொகுதியில் ஆட்டோ சங்கப் பெயர் பலகை திறப்பு விழாவில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா பங்கேற்றார். இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# 1800 பேருக்கு நிவாரண உதவிகள்!

## தமிழச்சி தங்க பாண்டியன் எம்.பி. வழங்கினார்!

சென்னை, டிச. 19-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்ரமணியன் ஆலோசனைபடி பெருமழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அடையாறு ஆற்றோர அன்னைசத்யா நகர், எஸ்.எம்.பிளாக் பகுதி எளிய மக்கள் 1800 பேருக்கு, பகுதி செயலாளர், 138வது வார்டு கவுன்சிலர் கே.கண்ணன் தலைமையில் 5கிலோ அரிசியை, விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.வி.எம். பிரபாகர்ராஜா, கணக்குநிலை குழு தலைவர் க.தனசேகரன் முன்னிலையில், தமிழச்சிதங்க பாண்டியன் எம்.பி. வழங்கினார்.

இதில் மாவட்ட துணை செயலாளர் வாசுகிபாண்டியன், பகுதி நிர்வாகிகள் எஸ். உமாபதி, அஜந்தாரவி, வட்ட செயலாளர்கள் மு.அன்பழகன், சோ.செந்தி ல்குமார், இரா. செழியன், பூக்கடை ஆர்.பழனிச்சாமி, பிகே.குமார், சதீஷ் கண்ணன், தொண்டரணி மாவட்ட அமைப்பாளர் தம்பி ஆர்.சசிகுமார், மாவ ட்ட மகளீரணி அமைப்பாளர் சகோதரி கனிமொழிதனசேகரன், கருப்புசாமி, விநாயகம், பச்சையப்பன், சபரி,மகேந்திரன், பாலா, பொன்னுரங்கம், சமையன், பாபு, ரமேஷ், அமுல்ராஜ், ராஜி, கமலக்கண்ணன், சுதா, ஏழுமலை, குமார், ஜெய், கோபி, மணி சீனு, தேவா, கோபி, கந்தன், அனீஷ், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# குற்றாலம் அருவிகளில் கடும் வெள்ளப்பெருக்கு!

தென்காசி, டிச.19-

வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ள பகுதிகளில் பொதுமக்கள் யாரும் செல்ல வேண்டாம் எனவும் மாவட்ட நிர்வாகம் சார்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வளிமண்டல கீழடுக்கு சுழற்சியின் காரணமாக கனமழை பெய்யக்கூடும் என இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்திருந்தது. தென்காசி மாவட்டத்தில் நேற்று முன்தினம் காலை முதல் பரவலாக மழை பெய்ய தொடங்கிய நிலையில் குற்றால அருவிகளில் தண்ணீர் வரத்து அதிகரிக்க தொடங்கியது.

இருப்பினும் பெரிய வெள்ளம் ஏற்படாததால் காலை 10 மணி வரையில் சுற்றுலா பயணிகள் மற்றும் ஐயப்ப பக்தர்கள் 'அனைவரும் அருவிகளில் குளிக்க அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

அதன் பின்பு மழைப் பொழிவு தொடர்ந்து அதிகரித்ததால் மெயின் அருவி, பழைய குற்றாலம், ஐந்தருவியில் காட்டாற்று வெள்ளத்தால் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது.

ஐந்தருவியில் அனைத்து கிளைகளிலும் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டியது. பழைய குற்றாலத்தி லும் வெள்ளப்பெருக்கு மற்றும் மெயின் அருவியில் பாதுகாப்பு வளைவை தாண்டி பெருவெள்ளம் ஏற்பட்டதால் சுற்றுலா பயணிகள், ஐயப்ப பக்தர்களுக்கு உடனடியாக குளிக்க தடை விதிக்கப்பட்டது. மேலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ள பகுதிகளில் பொதுமக்கள் யாரும் செல்ல வேண்டாம் எனவும் மாவட்ட நிர்வாகம் சார்பில் அறிவுறுத்தப் பட்டுள்ளது.

# பீடுநடை போடும் பேராசான் நம்மோடு வாழ்கிறார்



**பே**ராசான் என்றால்நம் பேரா சானே!
பேசறியாச் சொல்லாற்றல் கருத்தாற் கள்
சீராசான் என்றால்நம் ஓராசானே!
செந்தமிழே வடிவான தமிழாசானே
வாராதே வந்தநமின் பேராடானின்
வாழ்வியலின் செம்மைநெறி தமிழர்பாடம்
யாராசான் உலகுள்ளார் அவர்க ளுள்ளே
நல்லாசான் வெல்லாசான் பேரா சானே

கோயிலுக்கோ அவர்போன தில்லை ஆனால்
கோயிலாக வேஅவரும் வாழ்ந்தா ரென்னே!
தாயினைப் போல் கழகத்திற்(கு) அவரி ருந்தார்
தந்தைவழிப் பகுத்தறிவின் தந்தை யானார்
மாயிருள்தோய் நிலை தி.மு.கழக மேற்கா
வான்கதிரோன் பேரொளியால் ஒளிப ரப்பி
சேயினைப்போல் கலைஞர்தாம் கழகம் காக்கச்
செப்பரிய ஒளிவெள்ளத் துணைநின் றாரே

அறிஞரண்ணா தி.மு.க. கண்ட போதில்
அண்ணாவின் உண்மையான தம்பி ஆனார்
அறிவார்ந்த தம்பிமார்கள் பலரும் கூட
அவர்க்கெல்லாம் ஒழுங்குமுறை அடக்கம் அன்பை
அறிவுநெறி தான்நடந்தே கழகத் தோழர்
ஆசான்போல் வழிகாட்டும் பண்பை வின்டார்
அறிந்தறிந்தே தேர்ந்துநமின் கலைஞர் கண்டார்
அன்றுமுதல் கடைசிவரை கலைஞர் தோழர்

பட்டிதொட்டி பேரூர்கள் சிற்றூர் எல்லாம்
பதித்த அந்நாள் தி.மு.க. கொள்கை வீறு
முட்டிமோதி காங்கிரசு அந்நாள் ஆட்சி
மொத்தஎதிர் புக்களங்கள் போரா டித்தான்
எட்டுதிக்கும் தமிழ்நாட்டில் வளரச் செய்த
ஈடில்லா அர்ப்பணிப்பால் கழகம் காத்தே
நட்டபயிர் நெல்மணியாய் கண்டே அன்னை
நாடுதமிழ் ஆட்சியேற்றே நிமிர்ந்தே வென்றார்

கழகத்தின் ஆட்சி யெலாம் கலைஞர் தம்மின்
கவசமாகித் தமிழ்தமிழர் காப்புத் தந்தார்
நிழல்தந்த மரம்வீழ்த்த நிழலில் வாழ்ந்தார்
நெஞ்சுநஞ்சு வஞ்சகத்தால் நிமிர்ந்து நின்றே
தழல் நெருப்பை வைத்தபோதோ அவர்தம்தீய
தகாதசெயல் கண்டித்தே கழகத்தோழர்
பழந்தமிழ்தாய் கலைஞர்க்கே துணையாய் ஆக்கிப்
பைந்தமிழர் காவல்தெய் வத்தைக் காத்தார்

தலைமைதாங் கும்தகுதி யெல்லாம் இருந்தும் கூட
தகுதியிலும் தகைத்தகுதி கழகம் காக்கும்
தலைமைக்குப் பெருந்தகுதி கலைஞர்க்(கு) உண்டே
கருத்துரைத்தே கலைஞர்தமின் தலைமை கண்டார்
தலைமைதம் நட்புகலை ஞர்தாம் போற்றி
தந்தைதாய் தம்பிள்ளை பாசம்போல
தலைமைகலை ஞர்தம்முள் கலந்தே வென்றே
தமிழ்சமுதா யத்தைதலை நிமிரச் செய்தார்

நிலம்போல அடக்கத்தின் பொறுமைமாசில்
நெறிகாக்கும் பகுத்தறிவின் நெஞ்சத் தூய்மை
நலம்தரும்வெல் செயற்கோவாய் வாழ்ந்த தன்றி
யாரெவர்க்கும் மாறுபாடு எண்ணாச் செம்மை
உலகத்துத் தமிழரெலாம் வணங்கு மாறே
ஆன்றவிந்த கொள்கைக்கோச் சான்றோ ராகி
நலம்தமிழர் அடையாள எடுத்துக் காட்டாய்
தான்வாழ்ந்த பேராசான் தமிழாய் வாழ்வார்!

இருந்தமிழ்நம் முத்தமிழ்க்கோ கலைஞர் தம்மின்
இதயமாக வாழ்ந்துநட்பின் உரிமை காத்தார்
பெருந்தமிழ்நம் புலவர்களின் நெஞ்ச கத்துப்
பொழிலெல்லாம் உலாவந்து காலம் வென்றார்
**அருந்தமிழ்மா முதல்வர்நம் இஸ்டாலின் ஓங்கு**
ஆட்சிபுகழ் பெருமைதரும் வாஞ்சை யாகி
பெருந்தமிழ்க்கோ பேராசான் தமிழர் உள்ளம்
பீடுநடை போடுகின்றார் கழகம் வெல்க!



- பெருங்கவிக்கோ
**வா.மு.சேதுராமன்**
(உலக அமைப்பாளர், பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்)